# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 10
## First Term Examination – 2020 – Grade 10

| | | | | |
|---|---|---|---|---|
| சைவநெறி | 12 | T | I, II | மூன்று மணித்தியாலம் Three Hours |

சுட்டெண் Index No

## சைவநெறி

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. ‘‘வெவ்வினையை வேரறுக்க வல்லவர்...’’
   1. சிவபெருமான் 2. முருகன் 3. விநாயகர் 4. சக்தி

2. கடவுள், ‘‘குணம் ஒன்றும் இல்லான்’’ எனக் குறிப்பிடும் நூல்
   1. தேவாரம் 2. திருவாசகம் 3. பெரியபுராணம் 4. திருப்பல்லாண்டு

3. தவம், தூய்மை, மனத்திருப்தி, தெய்வசிந்தனை எனக்குறிப்பிடும் யோக நெறி
   1. இயமம் 2. நியமம் 3. பிராணாயாமம் 4. தாரணை

4. உண்மை பற்றிக் குறிப்பிடும் உபநிடத மகாவாக்கியம்
   1. ஏகம்சத் 2. தத்வம் அஸி 3. அகப்பிரம்மஸி 4. சத்தியம் வத

5. ‘‘இந்த சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறவே’’ எனக் குறிப்பிட்டவர்
   1. ஆறுமுகநாவலர் 2. மாணிக்கவாசகர் 3. திருமூலர் 4. திருவள்ளுவர்

6. ஐப்பசி மாத அமாவாசை பிரதமை முதல் சஷ்டி ஈறாக அனுட்டிக்கப்படும் விரதம்
   1. புரட்டாதிச் சனி 2. கந்த சஷ்டி 3. விநாயகர் சதுர்த்தி 4. நவராத்திரி

7. இறைவன் எண் குணங்களைக் கொண்டுள்ள நிலை
   1. சொரூப நிலை 2. தடத்த நிலை 3. ஞான நிலை 4. முத்தி நிலை

8. உபவாசம் என்பது
   1. உணவைச்சுருக்குதல் 3. இறைவனுக்கு அருகே வசித்தல்
   3. இறைவனுடன் இரண்டறக்கலத்தல் 4. உணவு அருந்தாமல் இருத்தல்

9. ‘‘நல்லவர்களைக் காத்து தீயவர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகங்கள் தோறும் தோன்றுகின்றேன்’’ எனக் குறிப்பிடும் நூல்
   1. கந்தபுராணம் 2. திருக்குறள் 3. பகவத்கீதை 4. ஆகமம்

10. திருமணத்தின் போது உடலாலும் உள்ளத்தாலும் நாம் ஒருவரே என்பதைத் தெரியப்படுத்த செய்யப்படுவது
    1. கன்னிகாதானம் 2. மோதிரம் எடுத்தல்
    3. மாலைமாற்றுதல் 4. அருந்ததி பார்த்தல்



kalvi.lk

11. குமாரக் கடவுளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்
   1. சௌரம்   2. கௌமாரம்   3. சாக்தம்   4. வைஷ்ணவம்

12. ரிஷி என்ற சொல்லின் பொருள்
   1. காண்பவன்   2. அழிப்பவன்   3. சக்தியுடையவன்   4. அன்புள்ளவன்

13. "கற்றவர் காய்வது காமனையே..." இப்பதிக அடியில் காமன் எனக்குறிப்பிடுவது
   1. சிற்றின்பம்   2. பாம்பு   3. மன்மதன்   4. மேனி

14. அடியார்களுக்கு சுகத்தை வழங்குவதால் இறைவனுக்கு வழங்கும் பெயர்
   1. குணாதீதர்   2. சலமிலன்   3. சங்கரன்   4. சச்சிதானந்தன்

15. திருமுறைகளைப் பாடி அருளியோர்
   1. 12   2. 21   3. 4   4. 27

16. காலத்தால் முந்திய இந்திய இசை நூல்
   1. யாழ்நூல்   2. சாமம்   3. அதர்வண நூல்   4. இருக்கு

17. சூரிய அஸ்தமனம் முதல் அடுத்தநாள் அஸ்தமனம் வரை ஒரு நாள் எனக் கருதுவோர்
   1. இந்துக்கள்   2. கிறிஸ்தவர்கள்   3. இஸ்லாமியர்கள்   4. வைணவர்கள்

18. நவீன யுகத்து அரிச்சந்திரன் எனப் போற்றப்படுபவர்
   1. நாவலர்   2. காந்தியடிகள்   3. திருவள்ளுவர்   4. திருமூலர்

19. "பொக்கம் மிக்கவர் பூவும் நீரும்.." எனும் பாடல்ப் பகுதியில் பொக்கம் என்பது
   1. வஞ்சகம்   2. அன்பு   3. உண்மை   4. ஒப்புரவு

20. பின்வருவனவற்றுள் உபாசனைக்காண்டத்தை சேர்ந்தது
   1. மந்திரங்கள்   2. பிராமணங்கள்   3. ஆரணியங்கள்   4. உபநிடதங்கள்

21. பின்வருவனவற்றுள் பூர்வக்கிரியைகளுள் அடங்குவது
   1. சபிண்டிகரணம்   2. அன்னப்பிராசனம்   3. சிரார்த்தம்   4. அந்தியேட்டி

22. தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன்
   1. நரகாசுரன்   2. கஜமுகாசுரன்   3. சூரபத்மன்   4. மகிடாசுரன்

23. உள்ளத்து உணர்ச்சியிற் கொள்ளவும் படான்" என்று பாடியவர்
   1. ஆளுடைய பிள்ளை   2. ஆளுடைய அரசு
   3. ஆளுடைய நம்பி   4. ஆளுடைய அடிகள்

24. காலக்கணிப்பில் அமாவாசையை இறுதி நாளாகக் கொண்டு காலத்தைக் கணிப்பிடும் முறை
   1. அமாந்த முறை   2. சௌரமுறை   3. சூரியமானம்   4. பூர்ணிமாந்தமுறை

25. விநாயகர் சஷ்டி விரத காலத்தில் பாராயணம் செய்யப்படும் நூல்
   1. கந்தபுராணப்படனம்   2. பிள்ளையார் கதை   3. அபிராமி அந்தாதி   4. விஸ்ணுபுராணம்

26. மனிதனால் ஆக்கப்படாதவை என்பதனால் வேதத்திற்கு வழங்கப்படும் பெயர்
   1. எழுதாமறை   2. சுருதி   3. அபௌருஷேயம்   4. எழுதாக்கிளவி

27. பிறக்கப் போகும் 2020 ஆண்டின் பெயர்
   1. சர்வாரி   2. விகாரி   3. விளம்பி   4. பிலவ



kalvi.lk

28. தாலி கட்டியவுடன் மணமகனின் இடது பக்கத்தில் மணமகளை இருத்துதல் எதனைக் குறிக்கும்
    1. நடராஜவடிவம்    2. அர்த்தநாரீஸ்வரர்    3. சோமாஸ்கந்தர்    4. காத்தவராயர்

29. நடராஜப் பெருமானின் திருக்கோலத்தைக் காணும் பேறு கிடைக்க அப்பர்பெருமான் பாடிய பாடல்
    1. "நாமார்க்கும் குடியல்லோம்.."    2. "உற்றுமை சேர்வது..."
    3. "குனித்த புருவமும்...."    4. " கூற்றாயினவாறு...."

30. வேதாந்தம், வேதசிரசு என அழைக்கப்படுவது
    1. ஆரணியங்கள்    2. சங்கிதைகள்    3. பிராமணங்கள்    4. உபநிடதங்கள்

31. ஆலயங்களில் நடைபெறும் செயல்களில் விரும்பத்தக்கது.
    1. அதிக சத்ததத்துடன் ஒலி பெருக்கியை ஒலிக்கவிடல்
    2. கேளிக்கையான நிகழ்வுகளை நடாத்துதல்
    3. அன்னதானம் செய்வது
    4. சத்தமாக வெடி கொளுத்துவது

32. ஆன்மாக்கள் முத்தி அடைவதைக் குறித்து நிற்பது
    1. கொடியேற்றம்    2. கொடியிறக்கம்    3. தேர்த்திருவிழா    4. தீர்த்தத்திருவிழா

33. ஈசன் உவக்கும் இன் மலர்கள் பற்றிக் குறிப்பிட்டவர்
    1. திருமூலர்    2. திருவள்ளுவர்    3. விபுலாநந்தர்    4. விவேகானந்தர்

34. விழுமியம் என்பது எதனைக் குறிக்கும்
    1. ஒழுக்கமுடைமையும், அன்புடைமையும்
    2. கடமை, வாய்மை, தூய்மை ஆகிய மூன்றையும்
    3. ஒழுக்க வாழ்வு மூலம் பின்பற்றப் படுகின்ற அனைத்து நடத்தைகளையும்
    4. ஒழுக்கமுடைமையையும் செய்ந்நன்றியையும்

35. அகிம்சை என்பது
    1. ஒருவர் செய்த உதவியை மறவாமை
    2. எவ்வுயிர்க்கும் எண்ணம், சொல், செயல் என்பவற்றால் இன்னா செய்யாமை
    3. விளையாட்டுக்காயினும் பொய் பேசாமை
    4. பிற்போக்குச் சிந்தனைகள் சார்பானது.

36. திரிகரணங்கள் எனப்படுபவை
    1. மனம், வாக்கு, காயம்
    2. மனம், புத்தி, சித்தம்
    3. நிலம், நீர், தீ
    4. சூரியன், சந்திரன், அக்கினி

37. சனீஸ்வரனுக்குரிய வாகனம்
    1. குயில்    2. காகம்    3. கழுகு    4. மயில்

38. "வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" எனக்குறிப்பிட்டவர்
    1. திருநாவுக்கரசர்    2. திருவள்ளுவர்    3. திருமூலர்    4. வசிட்டர்

39. "பிரமபுரம்" என அழைக்கப்படும் ஆலயம்
    1. திருக்கழுமலம்    2. சிதம்பரம்    3. திருப்புன்கூர்    4. சீர்காழி

40. ஜீவகாருண்யம் எனப்படுவது.



kalvi.lk

1. பூசைகள் செய்தல்
2. தூய்மையாக இருத்தல்
3. கொல்லாமை
4. அன்றாட கருமங்களை ஆற்றுதல்

## பகுதி – II

**முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமான விடை தருக.
    1. இறைவனின் இரு நிலைகளும் எவை?
    2. அஷ்டபுஷ்பங்களுள் நான்கைத் தருக?
    3. ஒப்புரவு என்றால் என்ன?
    4. வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?
    5. அடங்கன் முறை என்றால் என்ன?
    6. சைவ நாற்பாதங்களும் எவை?
    7. பாடசாலைகளில் நடைபெறும் சமய விழாக்கள் எவை?
    8. விரதம் என்ற சொல்லின் பொருள் யாது?
    9. திருமுறைகளை ஓதுவதால் கிடைக்கும் பயன்கள் 4 தருக?
    10. இறைவழிபாட்டிற்கு அவசியமானவைகள் எவை?

(20 புள்ளிகள்)

02. பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொருளையும் தருக.
    1. ‘‘அங்கமும் வேதமுமம்.....’’
    2. ‘‘குனித்த புருவமும்...’’
    3. ‘‘உற்றுமை சேர்வது....’’
    4. ‘‘நாம் ஆர்க்கும் குடி....’’

((3+2)x2=10 புள்ளிகள்)

03. ‘‘சைவ விரதங்களால் ஆன்மீக ரீதியில் மட்டுமன்றி, விஞ்ஞான ரீதியிலும் பயன்கள் விளைகின்றன’’
    1. விரதம் குறித்து ஆறுமுகநாவலரின் கருத்து யாது?
    2. விநாயகர் சஷ்டி விரத காலம் யாது?
    3. சனீஸ்வர பகவானை எவ்வாறு வழிபடலாம்?

(2+3+5=10 புள்ளிகள்)

04. ‘‘வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே’’
    1. சைவசமயத்தின் பொது நூல் எது? சிறப்பு நூல் எது?
    2. வேதத்தின் மறு பெயர்கள் மூன்றினைக் குறிப்பிட்டு காரணம் தருக.
    3. வேதத்தின் உட்பிரிவுகளைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. ‘‘மனித வாழ்வை வளம்படுத்துவன சைவ விழுமியங்கள்’’
    1. மனித நேயம் உள்ளவரிடம் காணப்படும் நல்லொழுக்கப் பண்புகள் நான்கு தருக.
    2. திருவள்ளுவர் கருத்துப்படி இந்த உடல் எமக்கு எதற்காக கிடைத்துள்ளது என்கிறார்?
    3. ஜீவகாருண்யம் மிக்க செயல்கள் ஐந்து தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

06. ‘‘இந்துக்களின் வாழ்க்கை சடங்குகளோடு பின்னிப் பிணைந்துள்ளது’’
    1. பூர்வக் கிரியைகள் என்றால் என்ன? இரண்டைக் குறிப்பிடுக.
    2. கன்னிகாதானம் என்றால் என்ன?
    3. திருமண மேடையில் இடம்பெறும் சம்பிரதாயங்கள் எவை?

(2+3+5=10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக
    1. காலக்கணிப்பு



kalvi.lk

2. வாய்மை
3. தீபாவளி
4. சமயமும் கலைகளும்

(2+3+5=10 புள்ளிகள்)

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457